பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

14 10 2026 06 45
புதன்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

1. இந்தியா - கனடா இடையேயான நல்லுறவுகளை மேலும் வலுப்படுத்த இரு நாடுகளும் முடிவு செய்திருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. எல்லை தாண்டிய தீவிரவாதம் உள்ளிட்ட அனைத்து வன்முறைகளுக்கும் BIMSTEC அமைப்பின் உறுப்பு நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

3. சென்னைக்கு கிருஷ்ணா நதியில் இருந்து கூடுதலாக தண்ணீர் திறந்துவிடுமாறு ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடுவிடம், தமிழக முதலமைச்சர் திரு. விஜய் கோரிக்கை விடுத்துள்ளார்.

4. சாமானிய மக்களின் மீது த.வெ.க. அரசு விலைவாசி உயர்வு சுமையை ஏற்றிவைத்துள்ளதாக பி.ஜே.பி. மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குறை கூறியுள்ளார்.

5. இந்தியா-வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கிடையே நான்காவது டுவென்டி-டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><><><>

இந்தியா - கனடா இடையேயான நல்லுறவுகளை மேலும் வலுப்படுத்த இரு நாடுகளும் முடிவு செய்திருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கனடா பிரதமருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியது குறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், இந்த பேச்சுவார்த்தை இருநாட்டு உறவுகளில் ஏற்பட்டுள்ள சாதகமான முன்னேற்றத்தை வலுப்படுத்துவதுதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

வர்த்தகம், எரிசக்தி, தொழில்நுட்பம், பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் உறவுகளை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்தது என்றும் பிரதமர் அதில் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளும் இணைந்து நிலையான மற்றும் வளமான உலகை உருவாக்க பங்காற்றி வருவதாகவும் திரு. நரேந்திரமோடி தமது பதிவில் கூறியுள்ளார்.

<><><><><><><>

எல்லை தாண்டிய தீவிரவாதம், உள்ளிட்ட அனைத்து பிரிவினைவாத வன்முறைகளையும் *BIMSTEC* அமைப்பின் உறுப்பு நாடுகள் கண்டித்துள்ளன.

புதுதில்லியில் நேற்று நிறைவடைந்த இந்த நாடுகளின் முதலாவது உள்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தில்லி பிரகடனத்தில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சட்ட விதிமுறைகள் மற்றும் ஐ.நா. வகுத்துள்ள கோட்டுபாடுகளுக்குட்பட்டு தீவிரவாதத்தை எதிர்ப்பது என அதில் கூறப்பட்டுள்ளது.

பிராந்திய அளவிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை *BIMSTEC* நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

போதைப்பொருள் கடத்தல், இணையவழிக்குற்றங்கள், நிதி மோசடி, ஆள்கடத்தல், ஆயுதக்கடத்தல், கடற்கொள்ளை, சட்டவிரோத குடிபெயர்வு மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு இணையதளத்தை தவறாக பயன்படுத்துதல் உள்ளிட்ட அனைத்து தரப்பிலும் எதிர்க்கொள்ளக்கூடிய சவால்களை பாதுகாக்கக்கூடிய பிராந்தியமாக வங்காள விரிகுடா மண்டலத்தை இந்த நாடுகள் அங்கீகரிப்பதாக தில்லி பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<><><><><><><>

தெலுங்கு கங்கை திட்டத்தின்கீழ் சென்னைக்கு கூடுதல் தண்ணீர் திறந்துவிடுமாறு ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடுவிடம், தமிழக முதலமைச்சர் திரு. விஜய் கோரிக்கை விடுத்துள்ளார்.

விஜயவாடாவுக்கு நேற்று சென்ற முதலமைச்சர் திரு. விஜய், திரு. சந்திரபாபு நாயுடுவை சந்தித்து நதிகள் இணைப்பு உள்ளிட்ட விஷயங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

ஆந்திராவில் இருந்து சென்னைக்கு ஏற்கனவே 4 புள்ளி பூஜ்ஜியம் எட்டு டி.எம்.சி., தண்ணீர் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், நீர்இருப்பு மற்றும் தேவையை கருத்தில்கொண்டு கூடுதல் தண்ணீர் திறக்க தமது அரசு பரிசீலிக்கும் என்றும் திரு. சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

மேலும், கோதாவரி, காவிரி ஆறுகளை இணைக்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து திரு. சந்திரபாபு நாயுடு எடுத்துரைத்ததாகவும், வறட்சியை எதிர்க்கொள்வதற்கு நதிகள் இணைப்பு மட்டுமே நிரந்தர

தீர்வாகும் என்பதை அவர் வலியுறுத்தியதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக, 'விஜயவாடா உத்சவ்' நிகழ்ச்சியில் திரு. சந்திரபாபு நாயுடுவுடன், திரு. விஜய் பங்கேற்றார்.

<><><><><><><>

எல் நினோ பாதிப்பு காரணமாக தமிழகத்தின் மின்தேவை அதிகரித்திருப்பதாகவும், அதன் காரணமாகவே கூடுதல் விலைக்கு மின்சாரம் வாங்கவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருப்பதாகவும் அமைச்சர் திரு. நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாளை முதல் வரும் 31 ஆம் தேதி வரை சுமார் ஆயிரத்து 500 மெகாவாட் மின்சாரம் வாங்குவதற்கு மட்டுமே டெண்டர் கோரப்பட்டுள்ளதாக கூறினார்.

முன்னதாக அதிக விலைக்கு தனியாரிடம் இருந்து மின்சாரம் வாங்குவதற்கு எதிர்க்கட்சிகள் கடும்கண்டனம் தெரிவித்திருந்தன.

<><><><><><><>

இலவச மின்சாரம் உள்ளிட்ட நெசவாளர்களின் கோரிக்கைகள் குறித்து ஆலோசித்து, விரைவில் முடிவு எடுக்கப்படும் என்று மாநில கைத்தறித்துறை அமைச்சர் திரு. விஜய் பாலாஜி தெரிவித்துள்ளார்.

மத்திய ஜவுளி அமைச்சகத்தின்கீழ் இயங்கும் சேலம் கைத்தறி நெசவாளர்களின் சேவை மையத்தின் சார்பில் கோவையில் நேற்று தொடங்கிய சிறப்பு கைத்தறி கண்காட்சியை பார்வையிட்ட பின், செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

மேட்டுப்பாளையத்தில் கைத்தறி நெசவுப் பூங்கா அமைப்பது தொடர்பான கோரிக்கை குறித்து ஆய்வு செய்து விரைவில் பணிகள் தொடங்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, ரேஷன் கடைகளில் வழங்குவதற்கான இலவச வேட்டி, சேலை உற்பத்தி துரிதமாக நடைபெற்று வருவதாக திரு. விஜய் பாலாஜி கூறினார்.

<><><><><><><>

தமிழகத்தில் சாமானிய மக்களின் மீது த.வெ.க. அரசு விலைவாசி உயர்வு என்ற சுமையை ஏற்றிவைத்துள்ளதாக பி.ஜே.பி. மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குறை கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில் மாநிலத்தின் பணவீக்கம் தேசிய சராசரியை தாண்டி 6 புள்ளி எட்டு ஒன்று சதவீதமாக அதிகரித்திருப்பது இந்த அரசின் நிர்வாகத் திறமையின்மைக்கு சான்றாகும் என குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாவசிய பொருட்களின் உள்ளூர் சந்தை விலையை கட்டுப்படுத்த அரசு தவறிவிட்டதாகவும், இதனால் சாமானிய மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று மாதங்களில் ஜி.எஸ்.டி., வரிவசூல் முன் எப்போதும் இல்லாத வகையில், எதிர்மறை வளர்ச்சியை பதிவு செய்திருப்பதையும் திரு. நயினார் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

<><><><><><><>

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அருகே அரும்பாக்கம் கிராமத்தில் அஞ்சல் வார விழாவை முன்னிட்டு, சேமிப்புக் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி துணை அஞ்சல் கண்காணிப்பாளர் திருமதி. பிரேமாவதி தலைமையில் நடைபெற்றது.

இதில் செல்வமகள் சேமிப்புத் திட்டம், மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் அஞ்சல் துறையின் பல்வேறு திட்டங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

இந்த விழிப்புணர்வில் பங்கேற்றதன் மூலம் சேமிப்பின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ள முடிந்ததாக பயனாளிகள் தெரிவித்தனர்.

<><><><><><><>

நுரையீரல் புற்றுநோய் காரணமாக போப் ஆண்டவர் 14-ஆம் லியோவுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாக வாட்டிகன் தெரிவித்துள்ளது.

------

சவுதி அரேபியாவின் ரியாத் நகரில் ஹவுதி கிளர்ச்சிக்குழுவினர் நடத்திய ஏவுகணை தாக்குதலில் கட்டிடங்கள் இடிந்தன, 4 பேர் காயமடைந்தனர்.

-----------

பீஹார் மாநிலம் வைசாலி மாவட்டத்தில் கங்கை ஆற்றில் படகு கவிழ்ந்து நேரிட்ட விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர். 7 பேர் மீட்கப்பட்டனர்.

-------------

இந்த ஆண்டிற்கான திறன் மேம்பாட்டு போட்டியில் பங்கேற்க விரும்புவோர், வரும் 19 ஆம் தேதி வரை இணையதளம் மூலம் பதிவு செய்யலாம் என்று மத்திய திறன் மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

-----

தமிழகத்தில் பத்தாம் வகுப்பு மற்றும் ப்ளஸ் டூ தேர்வு அட்டவணையை மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் இன்று வெளியிட உள்ளார்.

-------------

காஞ்சிபுரம் மாவட்டம் காரப்பேட்டையில் உள்ள அறிஞர் அண்ணா நினைவுப் புற்றுநோய் மருத்துவமனையை அமைச்சர்கள் திரு. அருண்ராஜ், திரு. ரஞ்சித் குமார் ஆகியோர் நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

--------

நாமக்கல் மாவட்டத்தில் கால்நடை மருந்தகங்கள் மற்றும் கோழியின நோய் ஆராய்ச்சி கூடத்தில் அமைச்சர் கமலி நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

----------

மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளுக்கு தகுதிப்பெற்ற தென்காசி மாவட்ட விளையாட்டு வீரர்களை அமைச்சர் திரு. ராஜீவ் வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்.

--------

சிறுபான்மையின இஸ்லாமிய மாணவர்கள் வெளிநாட்டில் முதுகலைப் படிப்பு பயில்வதற்கான கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க, காலஅவகாசம் அடுத்தமாதம் 9 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

---------

திருப்பூர் மாவட்டத்தில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின்கீழ் இதுவரை 2 ஆயிரத்து 480 குழந்தைகளுக்கு மோதிரம் வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<><><><><><>

இந்தியா-வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கிடையே நான்காவது டுவென்டி-டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

ஹைதராபாத்தில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்கும்.

ஐந்து போட்டிகளைக்கொண்ட இந்த தொடரில் இந்தியா 2 போட்டிகளில் வெற்றிபெற்று தொடரில் முன்னிலை பெற்றுள்ளது.

ஐந்தாவது மற்றும் கடைசி டுவென்டி-டுவென்டி கிரிக்கெட் போட்டி பெங்களூருவில் வரும் 17 ஆம் தேதி நடைபெற உள்ளது.

--------------

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பஞ்சாப் அணி - ஒடிசா எஃப்சி அணியை எதிர்கொள்கிறது.

<><><><><><>